**கவனிக்க**.- *2010.06.04 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1658 - 2010 ජූනි 11 වැනි සිකුරාදා - 2010.06.11

*1658 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1064 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1066 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | 1067 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, யூன் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, யூன் மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# பதவிகள் - வெற்றிடம்

## மொரவெவ பிரதேச சபை

மொரவெவ பிரதேச சபையின் கீழ் உள்ள பதவி வெற்றிடங்களுக்கு மொரவெவ பிரதேச சபை அதிகாரப்பகுதிக்குள் நிரந்தரமாக வசிக்கும் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரல்.

| பதவி வகை | எண்ணிக்கை | மாதாந்த சம்பளம் | கல்வித் தகைமை |
|---|---|---|---|
| நூல்நிலைய உதவியாளர் | 01 | ரூபா 11,730 – 10 x 120 – 10 x 130 – 10 x 145– 12 x 160 – ரூபா 17,600. | 8 ஆம் தரம்/9 ஆம் ஆண்டு சித்தி |
| பாதுகாப்பு உத்தியோகத்தர் | 01 | ரூபா 13,050 – 10 x 130 – 10 x 145– 12 x 160 – ரூபா 17,600. | 8 ஆம் தரம்/9 ஆம் ஆண்டு சித்தி |
| வீதி வேலை ஊழியர் | 01 | ரூபா 11,730 – 10 x 120 – 10 x 130 – 10 x 145 – 12 x 160 – ரூபா 17,600. | 8 ஆம் தரம்/9 ஆம் ஆண்டு சித்தி |
| சாரதி | 01 | ரூபா 12,470 – 10 x 130 – 10 x 145 – 10 x 160 – 12 x 170 – ரூபா 18,860. | 8 ஆம் தரம்/9 ஆம் ஆண்டு சித்தி |

**தேவையான தகைமை.-**

(1) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு உற்பட்டவராக இருத்தல் (தற்போது அரச மாகாணசபைகளில் பணிபுரிவோரக்கு இது பொருந்தாது.)

(2) விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(3) விண்ணப்பதாரி மொரவெவ பிரதேச சபைக்கு உற்பட்டபகுதியில் மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக வசித்திருத்தல் (தேர்தல் இடாப்பு மூலமோ அல்லது பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களை வைத்திருத்தல்)

(4) விண்ணப்பதாரி ஏற்றுக்கொள்ளக்கூடிய நல்ல குணங்களையும் தேகாரோக்கியமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(5) விண்ணப்பதாரி நீதிமன்றத்தினால் எவ்வித குற்றங்களுக்கும் உள்ளாகாதவராக இருத்தல்.

(6) மொரவெவ பிரதேச சபையில் தற்போது நிரந்தர/ தற்காலிக/ சமயோசித/ ஒப்பந்த தொண்டர் அடிப்படையில் கடமையாற்றுவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பதாரர் மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டிருத்தல்.

(7) விண்ணப்பப்படிவத்தை ஏற்றபின் விண்ணப்பதாரிகளை சேர்த்துக்கொள்வதோ காலந்தாழ்த்துவதோ மாற்றம் செய்யும் அல்லது இல்லாமல் செய்யும் உரிமை மொரவெவ பிரதேச சபை செயலாளரைச் சார்ந்தது.

**சேவையின் நிபந்தனைகள் :**

1. இத்தொழில் நிரந்தரமானது.
2. விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய கொடுப்பனவுடன்
3. இப்பதவி மூன்று வருட தகுதிகாண் காலத்தைக் கொண்டது.
4. இப்பதவி அரச திணைக்களங்களின் தொழிலுக்கான ஆட்சேர்ப்பு விதிமுறைகளுக்கு உட்பட்டதோடு கிழக்கு மாகாண சபையினால் அவ்வப்போது மாற்றப்படும் சட்டக்கோவைகளுக்கு சகல தொழிலாளர்களும் கட்டுப்படல்.

**4. ஆட்சேர்ப்பு முறை.-**

1. நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவர்.
2. விண்ணப்பத்துடன் கீழ் குறிப்பிடப்படும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்து அனுப்புவதோ நேர்முகப்பரீட்சையின்போது அப்பிரதிகளின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல்.

* பிறப்புச்சான்றிதழ் ;
* கல்விச்சான்றிதழ் ;
* வசிப்பிடத்தை உறுதிப்படுத்துவதற்காக தேர்தல் இடாப்பின் பிரதி அல்லது பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் ;

* தொழில் தகைமை அனுபவம் சம்பந்தமான சான்றிதழ்கள் இருப்பின் அச்சான்றிதழ் ;
* சாரதி பதவிக்கான சாரதி அனுமதிப்பத்திரம்.

5. அடிப்படைத்தகைமைகள் இருக்கும் விண்ணப்பதாரிகளை மாத்திரம் நேர்முகப்பரீட்சைக்கு சேர்த்துக்கொள்ளப்படுவர்.

6. விண்ணப்பப்படிவம் சமர்ப்பித்தல் :

விண்ணப்பதாரர்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பத்திரத்திற்கு அமைய ஒழுங்குமுறைப்படி பூர்த்திசெய்து 2010.06.30 ஆந் திகதிக்கு முன் அல்லது அத்தினத்தன்று கிடைப்பதற்கு மொரவெவ பிரதேச சபை முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூளையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாக எழுதுதல் வேண்டும். முழுமையற்ற விண்ணப்பப்படிவங்களை நிரகாரிக்கப்படும்.

டபிள்யு. ஆர். நம்பண்டா,
தலைவர்,
மொரவெவ பிரதேச சபை.

மொரவெவ பிரதேச சபை,
2010.04.30 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

.......................................... பதவிக்கான விண்ணப்பம்

1. விண்ணப்பதாரியின் பெயர் முதலெழுத்துக்களுடன் :-----.
முதல் எழுத்து குறிக்கும் பெயர் :-----.

2. தபால் முகவரி :-----.

3. பிறந்த திகதி :-----.
வருடம் :-----, மாதம் :-----, திகதி :-----.

4. விண்ணப்ப முடிவுத்திகதிக்கு வயது :-
வருடம் :-----, மாதம் :-----, நாட்கள் :-----.

5. திருமணமானவரா/திருமணமாகாதவரா :-----.

6. இனம் :-----.

7. நீங்கள் இலங்கைப்பிரசையா? பரம்பரையா? குடியேரியவர்களா? :------.

8. கல்வித்தகைமை :-----.

9. தொழித்தகைமைகள் :-----.

10. நீங்கள் தற்போது இந்த பிரதேச சபையில் வேலை செய்பவராக இருந்தால்
(I) இப்போது வகிக்கும் பதவி :-----.
(II) இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :-----.
(III) இந்த நியமனம் வகை (நிரந்தரம்/தற்காலிகம்/பகுதிநேரம்/ஒப்பந்தம்/தொண்டர்) :-----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையென உறுதிப்படுத்துகிறேன். மேலும் வழங்கப்பட்ட தகவல்கள் நியமனத்தின் பின் பொய்யானதென உறுதிப்படுத்தப்பட்டால் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதோடு நஷ்டயீடாக எந்தக்கொடுப்பனவும் வழங்கப்படமாட்டாது என்பதனை தெரிவித்துக்கொள்கின்றோம்.

............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

6-138

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## தங்காலை பிரதேச சபை

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற (அங்கீகரிக்கப்பட்ட இடைக்காலச் சட்ட) விதி*

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற (அங்கீகரிக்கப்பட்ட இடைக்காலச் சட்ட) விதியின் 02 ஆம் பதந்தியின்படி உள்ளூராட்சிமன்ற அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி அந்த அமைச்சர் மூலம் 1953 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட, 1956 ஆம் ஆண்டு யூன் மாதம் 08 அந் திகதி இலங்கை அரசின் வர்த்தமானியின் IV ஆம் பகுதியில் பிரசுரிக்கப்பட்ட நகர சபையின் அங்கீகரிக்கப்பட்ட இடைக்காலச் சட்டங்களின் 1 ஆம் தொகுதியிலிருந்து XXV தொகுதி வரை அங்கீகரிக்கப்பட்ட இடைக்காலச் சட்டங்களும் XXVII ஆம் தொகுதியிலிருந்து XXIX தொகுதி வரை அங்கீகரிக்கப்பட்ட இடைக்காலச் சட்டங்களும், மேலே விதியின் பிரமாணங்களின் கீழ் 1975 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 05 ஆந் திகதி உள்ளூராட்சி அமைச்சர் மூலம் தயாரிக்கப்பட்ட 1975 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி இலங்கை சனநாயகச சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் IV ஆம் பகுதியில் பிரசுரிக்கப்பட்ட XXX ஆம் தொகுதியிலிருந்து XXXIII தொகுதி வரையான அங்கீகரிக்கப்பட்ட இடைக்காலச் சட்டங்கள் தங்காலை நகர சபை எல்லைக்குள் செயற்படுத்தற்படல் வேண்டும் என தங்காலை நகர சபை மூலம் 2009.10.29 ஆந் திகதி நடாத்தப்பட்ட மாதாந்த பொதுக் கூட்டத்தின் 03.9 ஆம் இலக்க தீர்மானத்தின்படி ஏற்றுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது என்பதை பொது மக்களின் கவனத்திற்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*அனில் செல்லாஹென்னதி,*
*தலைவர்,*
*தங்காலை நகர சபை.*

*தங்காலை நகர சபை அலுவலகம்,*
*2009.12.01.*

*6-142*

---

## கண்டி மாநகர சபை

*1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வீதிகளுக்கு பெயரிடுதல், நடுகல் நிலைநாட்டல் அவற்றை நிருவகித்தல் சட்டம்*

**"வணக்கத்திற்குரிய இம்புல்பிடியே தர்மபால தேரர் மாவத்தை" என பெயரிடுதல்**

*2009.12.22 ஆந் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் சபையினால் எடுக்கப்பட்ட 8 (64) ஆம் இலக்க தீர்மானத்திற்கு ஏற்ப வீதியின் பெயரை பின்வருமாறு மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது :*

*(252 ஆம் அத்தியாயம்) மாநகர சபை கட்டளைச் சட்டம் 71(1) இன் கீழ் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகார தத்துவங்களுக்கு ஏற்பவும் 1975 ஆம் ஆண்டு 04 ஆம் இலக்க வீதிகளுக்கு பெயர் இடுதல், நடுகல் நிலைநாட்டுதல், அவற்றை நிருவகித்தல் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரமும் மத்திய மாகாண சபையின் முதலமைச்சர் மூலம் வழங்கப்பட்ட அனுமதியின் பிரகாரம் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள மாவத்தையை "இம்புல்பிடியே தர்மபால தேரர் மாவத்தை" என பெயரிடப்பட்டுள்ளது என்பதை இத்தால் பகிரங்கப்படுத்துகின்றேன்.*

*சந்தன தென்னகோன்,*
*கண்டி மாநகர ஆணையாளர்.*

*மாநகரசபை அலுவலகம்,*
*கண்டி,*
*2010, மே 19 ஆந் திகதி.*

**அட்டவணை**

1. உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் - கண்டி மாநகர சபை
2. மாவட்டம் - கண்டி
3. வீதியின் தற்போதைய பெயர் - இல்லை
4. புதிதாக இடப்பட்டுள்ள பெயர் - "வணக்கத்திற்குரிய இம்புல்பிடிய தர்மபால தேரர் மாவத்தை"
5. பாதை விபரம் - சங்கராஜ மாவத்தையில் ஆரம்பமாகி ரஜவாசல பூங்காவுடன் ரஜபிஹில்ல மாவத்தைக்கு செல்வதற்கு பொது மக்கள் பாவனை செய்யும் நடை பாதை (பழைய Y. M. B. A. கட்டிட அருகில்) ஆகும்.

6-155

# நானாவித அறிவித்தல்கள்

**பதவிய பிரதேச சபை**

அனுமதிப் பத்திர கட்டணங்கள் - 2010

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 149 ஆம் சரத்தின் பிரகாரத்துடன் சேர்த்து அச்சட்டத்தின் 147 ஆம் சரத்தின் கீழ் பதவிய பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் 2009 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 24 ஆந் திகதி நடைபெற்ற பிரதேச சபைக் கூட்டத்தில் கீழ்வரும் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டதாக இதனால் அறியத் தருகின்றேன்.

ஏ. சமிந்த கெலும் அபேசேகர,
தலைவர்,
பதவிய பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பதவிய,
2009, கார்த்திகை 24 ஆந் திகதி.

**பிரேரணை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் அல்லது அச்சட்டத்தின் நடடிவக்கைகளின் கீழ் தயாரிக்கப்பட்ட துணைச் சட்டத்தில் விபரிக்கப்பட்ட இவ் அட்டவணையில் I ஆம் நிரலில் நிரூபிக்கப்பட்ட காரியாலயங்களுக்காக பதவிய பிரதேச சபை அதிகாரப் பிரிவுக்குள் ஆதனங்களை பாவிப்பதற்காக அதிகாரத்தை அளித்து பிரதேச சபையினால் 2010 ஆம் வருடம் வெளியிடப்பட்ட ஏதும் அனுமதிப் பத்திரம் தொடர்பாக இவ் அட்டவணையின் II ஆம் நிரலில் பொருத்தமான குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திர கட்டணங்களிற் பிறப்பிக்கப்பட்டு அதை அறவிட வேண்டுமென பிரேரிக்கின்றேன்.

**அட்டவணை**

| I ஆம் நிரல்<br>தொடர் இல. அனுமதிப்பத்திரத்தினால் அதிகாரமளிக்கும் காரியாலயங்கள் | II ஆம் நிரல்<br>ஆதனத்தின் வருடாந்த பெறுமதி | | |
|---|---|---|---|
| | ரூபா 750க்கு உட்பட்ட சந்தர்ப்பம் | ரூ. 750 க்கு மேற்பட்ட ரூ. 1,500 க்கு மேற்படாத சந்தர்ப்பம் | ரூ. 1,500க்கு மேற்பட்ட சந்தர்ப்பம் |
| | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 01. தங்கும் இல்லம் நடத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 02. போசன சபை நடத்துதல் | 500 0 | 700 0 | 1,000 0 |
| 03. சோற்றுக்கடை நடத்துதல் | 500 0 | 600 0 | 800 0 |
| 04. தேநீர் கடை நடத்துதல் | 200 0 | 300 0 | 500 0 |

| I ஆம் நிரல் | | II ஆம் நிரல் ஆதனத்தின் வருடாந்த பெறுமதி | | |
|---|---|---|---|---|
| தொடர் இல. | அனுமதிப்பத்திரத்தினால் அதிகாரமளிக்கும் காரியாலயங்கள் | ரூபா 750க்கு உட்பட்ட சந்தர்ப்பம் | ரூ. 750 க்கு மேற்பட்ட ரூ. 1,500 க்கு மேற்படாத சந்தர்ப்பம் | ரூ. 1,500க்கு மேற்பட்ட சந்தர்ப்பம் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 05. | சிற்றுண்டிச்சாலை நடாத்துதல் | 500 0 | 700 0 | 1,000 0 |
| 06. | பேக்கரி நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 07. | பால் விற்பனை | 500 0 | 700 0 | 1,000 0 |
| 08. | மீன் விற்பனை | 500 0 | 600 0 | 700 0 |
| 09. | இறைச்சி விற்பனை | 500 0 | 600 0 | 700 0 |
| 10. | மாட்டுத் தொழுவம் நடாத்துதல் | 400 0 | 600 0 | 700 0 |
| 11. | குளிர்பானக் கைத்தொழிற்சாலை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 12. | துணிச் சலவை தொழில் நடாத்துதல் | 300 0 | 500 0 | 700 0 |
| 13. | பால் பண்ணை நடாத்துதல் | 500 0 | 600 0 | 700 0 |
| 14. | முடி திருத்தல் சலூன் நடாத்துதல் | 400 0 | 500 0 | 600 0 |
| 15. | பாபர் சாப்பு நடத்துதல் | 400 0 | 500 0 | 600 0 |

அவ்வாறாயினும் ஏதும் ஆதனமான போசனசாலை சிற்றுண்டிச்சாலை அல்லது தங்குவிடுதி போன்ற விடயங்களுக்காக பாவிக்கப்படுகின்ற 1968 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்கம் கொண்ட அபிவிருத்திச் சட்டத்தின் செயற்பாடுகளுக்காக அப்போசணசாலை, சிற்றுண்டிச்சாலை அல்லது தங்கு விடுதி, இலங்கை உல்லாசப் பிரயாண சபையினால் பதிவு செய்யப்பட்டதும் அங்கீகரித்த அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் அனுமதிப்பத்திர கட்டணம் 2009 ஆம் ஆண்டு அந்த போசணசாலை, சிற்றுண்டிச்சாலை அல்லது தங்கு விடுதியின் வருமானத்தில் 1% ஆக வேண்டும்.

6-224/1

---

**பதவிய பிரதேச சபை**

கைத்தொழில் வரி பிறப்பித்தல் - 2010

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட 150 சரத்தின் கீழ் பதவிய பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி 2009 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 24 ஆந் திகதி நடைபெற்ற பிரதேச சபைக் கூட்டத்தில் கீழ்க்குறிப்பிட்ட பிரேரணை நிறைவேற்றப்பட்டதாக இத்தால் அறியத்தருகின்றேன்.

ஏ. சமிந்த கெலும் அபேசேகர,
தலைவர்,
பதவிய பிரதேச சபை.

பதவிய பிரதேச சபை அலுவலகம்,
2009, கார்த்திகை 24 ஆந் திகதி.

**பிரேரணை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 150 வது சரத்தின் (1) வது உப சரத்தில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் பதவிய பிரதேச சபை அதிகாரப் பிரிவுக்குள் ஏதும் ஆதனங்களை பயன்படுத்துவதால் இதன் அட்டவணை I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தொழிற்சாலை தொடர்பாக II ஆம் நிரலில் இவ் உப அட்டவணையின் குறிப்பிடப்பட்டுள்ள அளவில் வரியை 2010 ஆம் ஆண்டுக்காக பிறப்பித்து அறவிடப்பட வேண்டுமென பிரேரிக்கின்றேன்.

**அட்டவணை**

| தொடர் இல. | I ஆம் நிரல் கைத்தொழிலின் தன்மை | II ஆம் நிரல் ஆதனத்தின் வருடாந்த பெறுமதி | | |
|---|---|---|---|---|
| | | ரூபா 750க்கு உட்பட்ட சந்தர்ப்பம் | ரூ. 750 க்கு மேற்பட்ட ரூ. 1,500 க்கு உட்பட்ட சந்தர்ப்பம் | ரூ. 1,500க்கு மேற்பட்ட சந்தர்ப்பம் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 01. | அரிசி ஆலை | 500 0 | 700 0 | 1,000 0 |
| 02. | செங்கல் அரியும் ஆலை | 500 0 | 700 0 | 1,000 0 |
| 03. | வேல்டிங் வேலைத்தளம் | 500 0 | 700 0 | 1,000 0 |
| 04. | மரவேலைத்தளம் | 300 0 | 700 0 | 1,000 0 |
| 05. | கருங்கல் உடைத்தல் நிலையம் | 500 0 | 700 0 | 1,000 0 |
| 06. | அரைக்கும் தொழிற்சாலை | 500 0 | 700 0 | 1,000 0 |
| 07. | துவிச்சக்கர வண்டி திருத்துதல் | 400 0 | 700 0 | 1,000 0 |
| 08. | மரத்தளபாட விற்பனை நிலையம் | 500 0 | 700 0 | 1,000 0 |
| 09. | வீட்டு உபகரண விற்பனை நிலையம் | 500 0 | 700 0 | 1,000 0 |
| 10. | இரும்பு பட்டறை | 300 0 | 700 0 | 1,000 0 |

6-224/2

---

**பதவிய பிரதேச சபை**

வாகனங்கள் மிருகங்களுக்கான வரிகள் பிறப்பித்தல் - 2010

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட பிரதேச சபைச் சட்டத்தின் 148 ஆம் சரத்தில் சொல்லப்பட்ட அச்சட்டத்தின் 147 ஆம் சரத்தின் (1) ஆவது உப சரத்தின் கீழ் பதவிய பிரதேச சபைக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரத்தின்படி 2009 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 24 ஆந் திகதி நடைபெற்ற பிரதேச சபைக் கூட்டத்தில் கீழ்க்காணும் பிரேரணை நிறைவேற்றப்பட்டதாக இத்தால் அறியத்தருகின்றேன்.

ஏ. சமிந்த கெலும் அபேசேகர,
தலைவர்,
பதவிய பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பதவிய,
2009, கார்த்திகை 24 ஆந் திகதி.

**பிரேரணை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 148 ஆம் சரத்தில் சொல்லப்பட்ட அச்சட்டத்தின் 147 ஆம் சரத்தின் (1) வது உப சரத்தின் கீழ் பதவிய பிரதேச சபைக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் பொதுவாக பிரதேச சபை அதிகாரத்துக்குட்பட்ட பிரிவில் உள்ள பாவிக்கும் சகல வாகனங்களும், மிருகங்களுக்குமாக இதன் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அளவின்படி வருடாந்த வரி 2010 ஆம் ஆண்டுக்காக பிறப்பித்து அறவிடப்பட வேண்டுமென பிரேரிக்கிறேன்.

**அட்டவணை**

| | ரூபா ச. |
|---|---|
| மோட்டார் வாகனம், மோட்டார் சைக்கிள், மோட்டார் லொறி, பின் றிக்சோ மாட்டு வண்டி, துவிச்சக்கர வண்டி, சைக்கிள் அல்லாத சகல வாகனங்களுக்கும் | 25 0 |
| சகல துவிச்சக்கர வண்டி சைக்கிள் அல்லது சைக்கிள் கார் அல்லது மாட்டு வண்டிக்காக- | |
| (அ) வியாபார நோக்கத்துக்காக பயன்படுத்தல் | 18 0 |
| (ஆ) வியாபார நோக்கத்துக்கல்லாது வேறு காரியங்களுக்கு பயன்படுத்தல் | 04 0 |
| சகல மாட்டு வண்டிக்கும் | 20 0 |
| சகல கை வண்டிக்கும் | 10 0 |
| சகல ரிக்ஷோ வண்டிக்கும் | 7 50 |
| சகல குதிரை, போனிக்கும் | 15 0 |
| மற்றவைகளுக்கு | 50 0 |

26 அங்குலத்துக்கு மேற்படாத விட்டம் கொண்ட சக்கரங்கள் கொண்ட சிறுவர் வாகனம், வில்பரோ பொது இடங்களில் மற்றும் வியாபார காரியங்களுக்காக பயன்படுத்தும் தள்ளு வண்டியும் வியாபார நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாத தள்ளுவண்டிகளுக்கு கட்டணம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை.

இவ் அட்டவணையில் வியாபார காரியங்களுக்காக விற்பனைக்கு அல்லது வேறு வகைக் கைத்தொழிலுக்காக ஏதும் பொருட்கள் பதிவு செய்யப்படாத அச்சுப் பொருட்கள் கொண்டு செல்லல் போக்குவரத்துச் செய்தல் உள்ளடங்காது.

6-224/3

---

**பதவிய பிரதேச சபை**

வியாபார வரி பிறப்பித்தல் - 2010

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட பிரதேச சபைச் சட்டத்தின் 152 ஆம் சரத்தின் கீழ் பதவிய பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 2009 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 24 ஆந் திகதி நடைபெற்ற பிரதேச சபைக் கூட்டத்தில் கீழ்க்காணும் பிரேரணை நிறைவேற்றப்பட்டதாக இத்தால் அறியத்தருகின்றேன்.

ஏ. சமிந்த கெலும் அபேசேகர,
தலைவர்,
பதவிய பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பதவிய,
2009, கார்த்திகை 24 ஆந் திகதி.

**பிரேரணை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 152 ஆம் சரத்தின் (1) வது உப சரத்தின் கீழ் பதவிய பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி அச்சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட துணைச் சட்டத்தின் நடவடிக்கைகளின்படி அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளல் 150 வது சரத்தின்கீழ் ஏதும் வரியை கொடுக்க தேவை இல்லாத வியாபாரத்தை பதவிய பிரதேச சபை அதிகாரத்துக்குட்பட்ட பிரிவுக்குள் 2010 ஆம் ஆண்டு நடத்தும் சகல ஆட்களும் அவ் வியாபாரத்தின் 2009 ஆம் ஆண்டுக்கான வருமானம் இவ் உப அட்டவணையில் நடத்தும் 1 ஆவது பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதும் விடயங்களின் எல்லைக்குள் நடத்தும் சந்தர்ப்பத்தில் II வது பட்டியலில் குறிப்பிடப்பட்டதின் கீழ் அதன்படி 2010 ஆம் ஆண்டுக்காக பிறப்பித்து அறவிடப்பட வேண்டுமென பிரேரிக்கிறேன்.

**அட்டவணை**

| *I ம் நிரல்*<br>*2009 ஆம் ஆண்டு வர்த்தக வருமானம்* | *II ம் நிரல்*<br>*ரூபா ச.* |
|---|---|
| ரூபா 6,000 மேற்படாத சந்தர்ப்பம் | இல்லை |
| ரூபா 6,000 க்கு மேற்பட்ட ரூபா 12,000 மேற்படாத சந்தர்ப்பம் | 90 0 |
| ரூபா 12,000 க்கு மேற்பட்ட ரூபா 18,750 மேற்படாத சந்தர்ப்பம் | 180 0 |
| ரூபா 18,750 க்கு மேற்பட்ட ரூபா 75,000 மேற்படாத சந்தர்ப்பம் | 360 0 |
| ரூபா 75,000 க்கு மேற்பட்ட ரூபா 150,000 மேற்படாத சந்தர்ப்பம் | 1,200 0 |
| ரூபா 150,000 க்கு மேல் | 3,000 0 |

6-224/4

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.